# ஸ்ரீமான் முத்து சயம்பு ஆங்கிலக் கல்வியும்

இன்றைய விழாவிற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய இக் கல்லூரியின் அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன் அவர்களே! இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவரும், குடிவரவு, குடியகல்வு திணைக்கள உதவிக்கட்டுப்பாட்டாளருமான திரு வேலுப்பிள்ளை தவராசா அவர்களே! இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தீவக கல்வி வலய கல்வி நிர்வாகப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி நிறைஜா மயூரதாஸன் அவர்களே! இக்கல்லூரி ஓய்வுநிலை அதிபர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! பழைய மாணவர் சங்கச் செயலாளர் அவர்களே, இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளே, கல்லூரியின் நலனுக்காகப் பல உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கும் பழைய மாணவர்களே, இவ்விழாவிற்கு அனுசரணை வழங்கிக் கொண்டிருக்கும் இக்கல்லூரி பழைய மாணவர் வைத்தியக் கலாநிதி வி. விஜயரத்தினம் அவர்களே, நலன்விரும்பிகளே, கல்லூரியை மறவாது வெளியூரிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வருகை தந்திருக்கும் பழைய மாணவர்களே, பிறந்த மண்ணில் வாழ்ந்து எமது ஊருக்கும் பாடசாலைக்கும் உரமாக இருக்கும் பெற்றோர்களே! இக் கல்லூரியின் மாணவ மணிகளே! அனைவருக்கும் எனது இனிமையான காலை வணக்கம்.

இப்பாடசாலையின் ஸ்தாபகர் மதிப்புமிகு ஸ்ரீமான் முத்து சயம்பு அவர்கள் 1888ம் ஆண்டு இந்து ஆங்கில பாடசாலையை கிடுகினால் வேயப்பட்ட ஒரு சிறு கட்டடத்தில், மிக உயர்ந்த சிந்தனையுடன் ஆரம்பித்து வைத்தார். அவர் இப்பாடசாலையை சைவத்தையும், ஆங்கிலத்தையும் மாணவர்கள் திறம்பட கற்கவேண்டுமென்ற மிகச் சிறந்த நோக்கத்துடன் ஒரு ஆங்கில பாடசாலையாக பதிவு செய்தார். இப்பாடசாலை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து உயர்தர கல்லூரியாக உருமாற்றம் பெற்று காரை அன்னையின் மக்களுக்காக உயர்கல்வி பயிலும் வசதியை அளித்துக்கொண்டிருக்கின்றது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இப்பாடசாலை பல பெயர்கள் இடப்பட்டு, பெயர் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் காரைநகர் மக்களால் ‘‘சயம்பர் பள்ளிக்கூடம்’’ என்று பெருமையுடன் அழைக்கப்படுகின்றது.

சைவப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட முத்து சயம்பு அவர்கள் இக்கல்லூரியில் ஒரு திறமைமிக்க ஆசிரியராக அர்ப்பணிப்புடன் பணிபுரியத் தொடங்கினார். நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ச்சியடையத் தொடங்கிய இந்து ஆரம்பப்பாடசாலை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆங்கில வித்தியாலயம் என பெயர் மாற்றம் பெற்று விளங்கியது. இப் பாடசாலையின் கல்லூரிக் கீதம் பாடிய முன்னாள் ஆசிரியர் திரு நாகமுத்து கனகசுந்தரம் அவர்கள் அக் கீதத்தில் திருஞானசம்பந்த வித்தியாலயம் பற்றிக் குறிப்பிடும்போது

‘‘உவமையில்லாததோர் உமையவள் ஞானத்தை உண்டருள்
மதலையின் உயர் பெயர் தாங்கும் நம் கல்லூரி’’

என்று பாடியமையை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன்.

மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்கள், பண்பாடு, கலாச்சாரம், சமயப்பற்று, தன்னம்பிக்கை ஆகியவற்றை கல்வியினூடாக வளர்த்தெடுக்க அரும்பாடுபட்ட முத்து சயம்பு அவர்கள் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆங்கிலம், சமயம் ஆகிய இருபாடங்களையும் தாமே போதித்து வந்தார். இந்த இடத்தில் ஒரு தீவிர சமயப் பற்றாளராக இருந்த சயம்பு வாத்தியாயர் ஆங்கிலக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது மற்ற ஆசிரியர்களிடமிருந்து அவர் ஒரு வித்தியாசமான சிந்தனையுடையவர் என்பதையும் ஆங்கிலக்கல்வி எமது மாணவர்களுக்கு மிகமிக அவசியமானது என்பதனையும் ஒரு தூர நோக்குடன் தீர்க்க தரிசனமாக உணர்ந்திருந்தார் என்பதையும் இப்பொழுது அறியமுடிகின்றது. நாளுக்கு நாள் ஆங்கிலக்கல்வி மாணவர்களுக்கு மிகமிக அத்தியாவசியம் என்பதை அன்றே தனது கனவாக சயம்பு அவர்கள் கொண்டிருந்தார். காரை மண்ணுக்குப் பெருமை சேர்த்த எழுத்தாளர், வித்துவான் F.X.C நடராசா அவர்கள் சயம்பு அவர்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "இயம்பிடு ஆங்கிலக் கல்வியை
> வியன்மிகு காரைநகர் தன்னில்
> நயம்பெற உரைத்த நல்லாசான்"

முத்து சயம்பு அவர்களிடம் ஆங்கிலக்கல்வியைக் கற்ற மாணவர்கள் பலர் மலாயா நாட்டுக்குச்சென்று சிறந்த பதவிகளை வகித்தனர். அவர்களில் பலர் மாலாயா நாட்டில் நிறைந்த சம்பளம்பெற்று எமது ஊரில் தனவந்தர்களாக வாழ்ந்தார்கள். அவர்களுள் பலர் மலாயன் பென்சினியர்களாக எமது ஊரில் மிக மதிப்புடன் வாழ்ந்தவர்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. சயம்பு ஆசிரியரிடம் ஆங்கிலக்கல்வி கற்றதனால் ஆங்கிலக்கல்வியின் மதிப்பறிந்து தமது பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், பூட்டப்பிள்ளைகளுக்கும் வாழையடி வாழையாக ஆங்கிலக்கல்வியை போதித்து வந்தார்கள் காரைநகர் மக்கள் என்பதனை இன்றைய தினத்தில் பெருமையுடன் நினைவு கூர விரும்புகின்றேன்.

ஆங்கிலக்கல்வியும் சமய ஒழுக்கமும் சயம்புவின் தனி இலட்சியமாக இருந்தது என்பதனை அவரின் பல முயற்சிகளில் இருந்து எம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. வெள்ளிக்கிழமைகளில் ஈழத்துச் சிதம்பரத்தில் மாணவர்களின் பஜனையும், ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை மாணவர்கட்கு கட்டாயப்படுத்தியமையும் சயம்பரின் இறுக்கமான சமயக்கல்விக் கொள்கைக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

ஸ்ரீமான் சயம்பு அவர்கள் பாடசாலையின் அதிபர் பதவியிலிருந்து விலகிய பின்னரும், இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார் என்பதிலிருந்து இக்கல்லூரியை சயம்பு அவர்கள் தனது உயிரினும் மேலாக நேசித்தார் என்பதனை அறிய முடிகிறது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த சயம்பு அவர்களுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டுமென்றால், இன்றைய மாணவர்கள் இலட்சியம்மிக்க, அர்ப்பணிப்பு நிறைந்த, மனிதநேயம் மிக்க, தன்னலமற்ற, பொதுநல சேவையில் தம்மை எந்நேரமும் அர்ப்பணிக்கக்கூடிய, ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த, இந்நாட்டின், நற்பிரஜைகளாக தம்மை முற்றுமுழுதுமாக மாற்றியமைப்பதே ஸ்ரீமான் முத்து சயம்பு அவர்களுக்கு இன்றைய மாணவர்கள் மாத்திரமல்ல வருங்கால சந்ததியினரும் செய்ய வேண்டிய கைமாறாகும். இதன்மூலம் இப்பிரபஞ்சத்தில் காற்றோடு காற்றாக கலந்து இக்கல்லூரியை நேசித்துக்கொண்டிருக்கும் சயம்பு

ஆசிரியரின் ஆத்மா மகிழ்ச்சியும், திருப்தியும், சமாதானமும் அடையும் என்பதே உண்மையாகும். இதுவே எனது கருத்தும் ஆகும். இங்கு கூடியிருக்கின்ற பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் இன்று முதல் திரு. முத்து சயம்பு அவர்களின் உயர்ந்த சிந்தனையை, அழகிய கனவை நனவாக்க மேலும் மேலும் பாடுபடவேண்டும். அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். இன்றைய நன்நாளில் நான் உங்களுக்கு சொல்லுகின்ற மிகச்சிறந்த அறிவுரை ஆகும்.

இன்றைய தினத்தில் இக்கல்லூரியை மிகவும் நேசித்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ஸ்ரீமான் சயம்பு அவர்களின் வழிவந்த கலாநிதி ஆ.தியாகராஜா அதிபர் அவர்களையும் நினைவு கூரவேண்டியது அவசியமாகும். அமரர் கலாநிதி தியாகராஜா அவர்கள் இக்கல்லூரியில் ஆசிரியராக, பின்னர் அதிபராக இருந்து பல வருடங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர் என்பதையும் இன்றைய தினத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். எமது காரை மண்ணின் மக்களுக்காகவும், அம்மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பல வழிகளிலும் அரும்பாடுபட்டு அமரர்கள் ஆகிவிட்ட பல தியாக ஆத்மாக்களையும் இன்றைய தினத்தில் நாம் உள்ள நெகிழ்வுடன் நினைந்துகொள்ளவும் அவர்களுக்கு அகவணக்கம் செலுத்தவும் நாம் எல்லோரும் கடமைப்பட்டுள்ளோம்.

''சயம்பு சட்டம்பியார் காரைநகருக்கு வந்திலரேல் பெருங்குடி மக்களாக திகழும் மலாய் நாட்டு பஞ்சனியர்மார் காரைநகரில் தோன்றியிருக்கமாட்டார்கள்''

என்று வித்துவான் F.X.C நடராஜா அவர்கள் தனது ''***காரைநகர் மான்மியம்***'' எனும் நூலில் அழகாக குறிப்பிடுகின்றார்.

ஸ்ரீமான் சயம்பு அவர்கள் இன்று இந்த உன்னத கல்வி நிறுவனத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார் என்பதனை அறியமுடிகின்றது.

*''Chief among those who heard the clarion call of Navalar was the late S. Arunasalam of Karainagar who is still immortalized as No.2 to Navalar in founding Hindu School for Hindu children all over the peninsula spending all his wealth and becoming a pauper in the process. It was he with the assistance of the Late.K.Ledchumananpillai and S.Kandappar two benefactors of the area that founded the School in 1888. The beginning of the school are yet misty, but the founders, the great Trinity met their man in Sayamboo, a Saiva Savant who is now regarded as the Father of this great enterprise.*

இன்றைய நிறுவுனர் ஸ்ரீமான் முத்து சயம்பு அவர்களின் நினைவு நாளில் சயம்பு வாத்தியாயர் அவர்களால் மாணவர்களுக்கு விரும்பி போதிக்கப்பட்ட ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம் பற்றி ஒரு சில வார்த்தைகள் உங்களுடன் பகிர்ந்துகொள்வதையிட்டு பெருமகிழ்வு கொள்கின்றேன். மிக இனிமையானதும், இலகுவானதுமான ஆங்கிலமொழி இந்த நூற்றாண்டின் மிகமிக அத்தியவசியமான மொழியாகிவிட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமே. ஆங்கிலமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனைத் திறம்படக் கற்கத்தவறிய மக்கள், இப்பொழுது அதன் முக்கியத்துவத்தை உணரத்தொடங்கியுள்ளனர்.

விஞ்ஞான வளர்ச்சி உயர்ந்த நிலையை அடைந்த இக்கால கட்டத்தில் கணினியும் ஆங்கிலமொழியும் இன்றி எதையுமே சாதித்துவிடமுடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உலகப்பொதுமொழி, தொடர்பாடல்மொழி, இணைப்புமொழி, கணினிமொழி, நூலகமொழி என தன்னை நிலைநிறுத்திய ஆங்கிலமொழி உலகத்தின் இரண்டாவது மொழி என்ற சிறப்பையும் பெறுகின்றது. உலகளாவியரீதியில் எல்லா நாடுகளிலும் எந்த மூலைமுடுக்குகளிலும் ஆங்கில மொழி பேசப்பட்டுவருகின்றது. குறிப்பிட்ட ஒரு நாட்டுமொழி தெரியாத மக்கள் ஆங்கிலமொழியை தெரிந்து வைத்திருந்தால் அதன்மூலம் மற்றவர்களுடன் எந்த இடத்திலும் இலகுவாக தொடர்புகொள்ள முடிகிறது. ஆங்கிலமொழியானது வயது வித்தியாசம் இல்லாது சிறுவர் முதல் முதியவர் வரை யாவரும் கற்கவேண்டிய ஒரு பொது மொழியாகக் கருதப்படுகிறது.

இருபத்தியாறு எழுத்துக்களை மட்டுமே கொண்ட இம்மொழியானது கற்பதற்கு மிக இலகுவான மொழி என்பதே உண்மையாகும். ஆங்கில இலக்கண விதிகள் சுலபமாக உள்ளமையும் இதன் கற்றலை இலகுவாக்கிவிடுகின்றது. நல்ல உச்சரிப்புடனும் இனிய தொனியுடனும் இம்மொழியை பேசும்போது கேட்பதற்கு மிக இனிமையாகவும் கவர்ச்சியமாகவும் இருப்பதுடன், கேட்பவருக்கு பேசுபவர்மீது நல்ல மரியாதையும், மதிப்பும் ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் எமது நாட்டில் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தை ஒரு கசப்பான, கஷ்டமான, வேண்டாத பாடமாகவே கருதிவருகிறார்கள். இதற்கு தாய்மொழி மூலம் கல்வி போதிப்பது ஒரு முக்கிய காரணமாகும். அடுத்ததாக ஆங்கிலமொழி கட்டாயபாடம் ஆக்கப்படாமையும் இன்னொரு காரணமாகும். இந்த இரு முக்கிய காரணங்களுமே மாணவர்கள் ஆங்கில பாடம் கற்பதற்குரிய சந்தர்ப்பத்தையும் ஆர்வத்தையும் குறைத்துள்ளன.

சிறுவயதிலிருந்தே முக்கியமாக பாலர் வகுப்பில் இருந்து மிக இலகுவான முறையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். மிகவும் சிறிய குழந்தைகள் எதையும் இலகுவாக கற்றுக்கொள்வார்கள். இந்த வகையில் ஆங்கிலமொழியை விளையாட்டுகள், பாடல்கள் சிறிய கதைகள் போன்றவற்றினூடாக, அழகாகவும், இனிமையாகவும் சொல்லிக்கொடுத்தால் அவர்களுக்கு ஆங்கிலமொழி மீது ஆர்வமும், விருப்பமும், கவர்ச்சியும் ஏற்பட்டுவிடும். உலகில் கஷ்டமான விடயம் என்று எதுவுமே கிடையாது. முயற்சி இருந்தால் எதையுமே சாதித்துவிட முடியும் ஆகவே மாணவர்கள் மாத்திரமல்ல, ஆசிரியர்கள், பெற்றோர்கள் யாவரும் சேர்ந்து அக்கறையுடன் செயற்பட்டு நல்ல ஆங்கில அறிவு பெற்ற சமுதாயத்தை வருங்காலத்தில் உருவாக்கவேண்டும் என்பதே எனது பேரவா ஆகும். பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஆங்கிலம் படித்தவர்கள் யாவரும் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தி ஊக்கப்படுத்துதல் அவசியமாகும். எனது ஆங்கிலக் கல்வி பற்றிய உண்மையான அனுபவத்தினை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். எனது அப்பா திரு.க.ந.விஜயரத்தினம் அவர்கள் இக்கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியரும் லண்டன் ஆங்கில பட்டதாரியும் ஆவார். எனது அம்மா திருமதி சிவயோகம் விஜயரத்தினம் அவர்கள் ஆங்கில ஆசிரியரும் அதிபரும் ஆவார். அவர்கள் இருவரும் சிறுவயதிலிருந்தே எங்களை ஆங்கிலமொழி கற்கவேண்டும் என்று மிகவும் ஊக்கப்படுத்தியவர்கள். அவர்களின்

முயற்சியால் எங்கள் வீட்டில் என்னுடன் சேர்ந்து இக்கல்லூரியின் பழைய மாணவர்களாகிய நாங்கள் மூன்று பேர் ஆங்கில இலக்கியத்தில் சிறப்புப்பட்டதாரியாகத் தேர்ச்சிபெற்றோம். நானும் மறைந்த எனது சகோதரர் பேராசிரியர் ஜோன் மனோகரன் கென்னடி அவர்களும் ஆங்கில இலக்கியத்தில் கலாநிதி பட்டம் பெறுவதற்காக எமது பெற்றோரும் வெளிநாட்டில் உள்ள மற்றைய எமது சகோதரர்களும் எங்களை எப்பொழுதுமே ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தார்கள். எனது பெற்றோர்களும் எனது இக்கல்லூரி, யாழ்ற்றன் கல்லூரி முன்னாள் ஆசிரியர்களும், குறிப்பாக சென்னை பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய பேராசிரியர்களுமே எமக்கு வழிகாட்டியாக இருந்தார்கள் என்பதை இந்நேரத்தில் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நானும் எனது சகோதரர் கென்னடியும் பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய விரிவுரையாளர்கள் ஆனோம். எனது மற்றைய சகோதரர் திரு. வி.பிறேமதாஸ்குமாரசிறி அவர்கள் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றுகின்றார். இதை இன்றையநாளில் நான் உங்களுக்கு ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் மாத்திரமல்ல பெற்றோர்களும், மற்றவர்களும் சிறந்த அக்கறை செலுத்த வேண்டும் என்பதே எனது கருத்து ஆகும். இதைத் தற்புகழ்ச்சிக்காகவோ, எம்மைப்பற்றி பெருமை பேசுவதற்காகவோ அல்ல. ஒரு சாதாரண கிராமத்தில் படித்து ஆங்கில இலக்கிய கலாநிதியாக பட்டம் பெற்று இலங்கை தென்கிழக்கு, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளராக சேவையாற்றி, வெளிநாட்டில் எதியோப்பியப் பல்கலைக்கழக பேராசிரியராக உயர்வுபெற்று, உலகளாவிய ரீதியில் மக்களுக்காக சேவைசெய்த பேராசிரியர் கென்னடி அவர்களைப் போல உங்களில் பலர் ஆங்கில மொழியையும், ஆங்கில இலக்கியத்தையும் படித்து சிறந்த ஆங்கில ஆசிரியர்களாகவோ பேராசிரியர்களாகவோ வரவேண்டும். சிறந்த ஆங்கில்மொழி பேசவும் எழுதவும் தெரிந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்ற மிகப்பெரிய இலட்சியத்தை இன்று தொடக்கம் உங்களுடைய கனவாக எடுத்து அதை நனவாக்க முயற்சிக்கவேண்டும் என்று இங்கிருக்கும் அத்தனை மாணவச்செல்வங்களையும் கேட்டுக்கொள்கின்றேன். இதுவே இப்பாடசாலையை ஸ்தாபித்த ஸ்ரீமான் முத்து சயம்பு அவர்கள் அன்றைய நாளில் கண்ட இலட்சியயக் கனவு ஆகும். ஆங்கில மொழியை மிகவும் நேசித்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய சயம்பு உபாத்தியாயர் அவர்களுக்கு நாம் செய்யும் கைமாறு இதுவே ஆகும். எனக்கு இந்த அரிய சந்தர்ப்பத்தை வழங்கிய இப்பாடசாலை அதிபர் அவர்களுக்கும், பாடசாலை சமூகத்துக்கும் எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்து இத்துடன் எனது நினைவுப்பேருரையை நிறைவு செய்து கொள்கின்றேன்.

நன்றி.

**கலாநிதி (திருமதி) வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம்**
(பழைய மாணவி, முதுநிலை விரிவுரையாளர் - ஆங்கில இலக்கியம்,
மொழியியல் ஆங்கிலத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)